www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi8T

**தென்காசி மாவட்டம்**

**அரையாண்டு பொதுத் தேர்வு, டிசம்பர் - 2024**

09-12-24

**வகுப்பு 8**

**தமிழ்**

காலஅளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

**பகுதி - I**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **10×1=10**

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .............
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ............. காரணமாக அமைந்தது
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை

3) வானில் கரு ............. தோன்றினால் மழை பொழியும் என்பர்
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

4) பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் .............
அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

5) பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் .............
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

6) அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது .............
அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

7) நம்மை .............ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்
அ) இகழ்வாரை ஆ) அகழ்வாதை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

8) சேரர்களின் தலைநகரம் .............
அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி

9) கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு .............
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

10) எம்.ஜி.ஆர். ............. என்னும் ஊரில் கல்வி பயின்றார்
அ) கண்டி ஆ) கும்பகோணம் இ) சென்னை ஈ) மதுரை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5×1=5**

11) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .............
12) முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ............. எனப்படும்.
13) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ............. இன்பம் ஆகும்.
14) சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் .............
15) இதம்+தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............

**III. பொருத்துக:** **5×1=5**

| | | |
|---|---|---|
| 16) திருவள்ளுவர் | - | சிந்தாமணி |
| 17) இயற்கைத் தவம் | - | பெரிய புராணம் |
| 18) இயற்கை ஓவியம் | - | திருக்குறள் |
| 19) இயற்கைப் பரிணாமம் | - | பத்துப்பாட்டு |
| 20) இயற்கை அன்பு | - | கம்பராமாயணம் |

**IV. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **10×2=20**

21) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
22) ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
23) ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
24) விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
25) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
26) வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.
27) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



28) எழுவாய் வேற்றுமையை விளக்குக.

29) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

30) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

31) சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?

32) கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

33) கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?

34) எம்.ஜி.ஆர். நாடகத் துறையில் ஈடுபடக் காரணம் என்ன?

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5×4=20**

35) எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

36) ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

37) நோய்கள் பெருகக் காரணம் என்ன?

38) தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.

39) வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன யாவை?

40) மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

41) இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

**VI. கீழ்க்காணும் பாடலை அடிபிறழாமல் எழுதுக: 4+2+2=8**

42) அ) வழிவர் .........எனத் தொடங்கும் படைவேழம் (கலிங்கத்துப் பரணி) பாடல்.

ஆ) 'சொல்' ....... என முடியும் திருக்குறளை எழுதுக.

இ) 'விலங்கொடு' ........ எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VII. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க: 3×8=24**

43) அ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) எம்.ஜி.ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

44) அ) 'வெட்டுக்களியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

45) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:**

அ) நூலகம் - முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**VIII. பின்வரும் மொழிப்பயிற்சி வினாக்களுக்கு விடையளிக்கவும்: 4×2=8**

**46) கலைச்சொல் தருக:**

அ) Millets ஆ) Victory

**47) கோடிட்ட எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக:**

அ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ______

ஆ) உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள் அக்டோபர் 5 ______

**48) பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக:**

அ) தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது.

ஆ) திரு வி.க. எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது

**49) பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்து எழுதுக:**

அ) பானையை உடைத்தது கண்ணன் அல்ல

ஆ) சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.

------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com